செ.வெ.எண்:05 நாள்:04.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுருத்தளின்படி, அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அகற்றும் பணியினை கண்காணித்திட மாவட்ட அளவில் அரசு அலுவலர்களைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருதை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக அரியலூர் மாவட்ட பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிநில கோட்டம் மற்றும் ஆற்றுபாதுகாப்பு கோட்ட பராமரிப்பில் உள்ள ஆறு, ஏரி, வாய்க்கால் மற்றும் நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை அகற்றும் பணியினை பொதுப்பணித்துறை சார்ந்த உதவி பொறியாளர்கள் மூலமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கொள்ளிடம் ஆற்று படுகை, பொன்னேரி, சித்தேரி மற்றும் அப்பா முப்பனால் ஏரி உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் உள்ள சீமைக்கருவேல மரங்கள் பொக்லைன் மற்றும் JCP இயந்திரம் கொண்டு அகற்றும் பணி மருதையாறு வடிநில கோட்ட பொறியாளர் திரு.தெய்வீகன் அவர்களின் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது.

மேலும் அரசுக்கு சொந்தமான இடங்கள், சாலையோரங்களில் வளர்ந்துள்ள சீமைக்கருவேலி மரங்கள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அகற்றப்பட்டு வருகின்றது. பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் காலி மனைகளில் உள்ள சீமைக்கருவேலி மரங்களால் சுற்றுசூழல் பாதிப்பிற்குள்ளாவதால், நிலத்தின் உரிமையாளர்களே முழுமையாக அகற்ற உத்தரவிட்டதன்பேரில் நில உரிமையாளர்கள் சீமைக்கருவேல மரங்களை அகற்றி வருவதை அரசு அலுவலர்களைக் கொண்டுள்ள குழுக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருவதோடு இல்லாமல் துரிதப்படுத்தும் பணியினை செய்து வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து, பட்டா நிலத்தில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை பட்டாதாரர்கள் உடனடியாக அகற்றிடவேண்டும். தவறும் பட்சத்தில் பட்டா நிலத்தில் உள்ள சீமைக்கருவேல மரங்களை சட்டப்படி அகற்றிவிட்டு, அதற்கான செலவுத்தொகையை வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் கீழ் அபராதத்துடன் வசூல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.